# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044—22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 0342/2015/ந
ஆணை எண்: 0185/2016/ந
நாள்: 03/12/2016

திருமதி. A. மீனாட்சி,
32, பாரதிதாசன் 4-வது தெரு,
வெள்ளைக்கோட்டை,
அருப்புக்கோட்டை,
விருதுநகர் மாவட்டம் - 626 101. முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
அருப்புக்கோட்டை நகராட்சி மற்றும் இருவர். எதிர் மனுதாரர்

## ஆணை

மனுதாரரது 23.12.2015 நாளிட்ட முறையீட்டு மனு 28.12.2015 அன்று பெறப்பட்டு அ.ம.எண்:0342/2015-ஆக பதிவு செய்யப்பட்டது.

மனுதாரரது முறையீட்டு மனுவில் அருப்புக்கோட்டை நகரில் மலையரசன் கோவில் ரோட்டின் தென்புறம் உள்ள ரெங்கநாதன் ஊரணியை 29-வது வார்டு கவுன்சிலர் திரு. கண்ணன் என்பவர் சட்டவிரோதமாக மூடி வீட்டடி மனைகளாகப் பிரித்து சட்ட விரோதமாக பத்திரப் பதிவுகளை செய்து கிரையம் செய்து வருவதாகவும் அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையர் நகர் ஊரமைப்புத் துறையினரிடமிருந்து எந்தவித அனுமதியும் பெறாமல் வீடு கட்ட அனுமதி அளித்து வருவதாக தெரிவித்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தின்கீழ் வரையரைக்குட்படாத வருவாய்த் துறை மற்றும் பதிவுத் துறை அலுவலர்களையும் மனுதாரர் எதிர்மனுதாரர்களாக குறிப்பிட்டு சில புகார்களை குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரரது புகார் மனு குறித்து பதில் அறிக்கை தாக்கல் செய்திடவும் 12.02.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகிடவும் வலியுறுத்தி நகராட்சி ஆணையருக்கு இம்முறை மன்ற நடுவ அழைப்பாணை (அ.ம.எண்: 0342/16 நாள்:20.1.2016) அனுப்பப்பட்டது. அதன்படி அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையர் விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறான தனது வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளார்.

"மனுவில் குறிப்பிட்டுள்ள மலையரசன் கோவில் ரோட்டின் தென்புறம் வார்டு சி, பிளாக் 5, டிஎஸ் எண் 83 ரெவின்யூ சர்வே எண்.118/3 விஸ்தீரணம் 3 ஏக்கர் 46 செண்ட் என்பது ரங்கநாதன் ஊரணி என நில அளவைகள் பதிவேட்டில் பதிவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். நகராட்சியால் பராமரிக்கப்படும் நில அளவைகள் மற்றும் நில உரிமைகள் பற்றிய பதிவேட்டில் 1990-ஆம் ஆண்டு முதல் விஸ்வகர்மா உறவின் முறைக்கு பாத்தியப்பட்டதாக பதிவுள்ளது.

இது வட்டாட்சியர் அலுவலகத்தில் தாலுக் பட்டா டிரான்ஸ்பர் 506/90ன் படி 1.11.90 முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பு உள்ளது. இப்பதிவேட்டில் டி.பி. எண் மட்டும் பதிவேற்றம் உள்ளது. அதில் நகர சார் ஆய்வாளர் அத்தாட்சி செய்துள்ளார். ஆனால் எந்த அடிப்படையில் மாற்றப்பட்டது என்ற குறிப்பு அதில் குறிப்பிடப்படவில்லை. தற்போது இது குறித்து விசாரணை நடக்க இருப்பதன் பொருட்டு புகார் மனுவில் குறிப்பிட்ட நபராகிய விஸ்வகர்ம உறவின் முறை தலைவரும், அருப்புக்கோட்டை நகராட்சி 29-வது வார்டு மன்ற உறுப்பினருமான திரு. கண்ணனிடம் இது குறித்து விவரம் பெறப்பட்டது. அவர் அளித்த ஆவண நகல்கள் அடிப்படையில் 13.10.1958-ஆம் ஆண்டு 2வது மேற்முறையீடு எண்.784/1958ன் படி சென்னை உயர் நீதி மன்றத்தில் தொடரப்பட்டு உயர்நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் மாறுதல் செய்யப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. இதனுடைய நகல் 12.09.2000-ல் வழங்கப்பட்டுள்ளது. இதனுடைய அடிப்படையில் அருப்புக்கோட்டை வட்டாட்சியர் தனது ஆணை எண். மு.மு.டி.பி.டி. எண். 506/90-91 நாள்:1.10.1990ன் படி மேற்படி ஊரணியை விஸ்வகர்ம ஐந்து வகுப்பு மகா ஜன சபை பொது உறவின் முறைக்கு பாத்தியப்பட்டது என குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் மனுதாரர் மனுவில் எதிர் மனுதாரராக குறிப்பிடப்பட்டுள்ள திரு.கண்ணன் சமர்ப்பித்துள்ள 1957ம் வருட செட்டில்மெண்ட் 'அ' பதிவேடு நகல் என கையால் எழுதப்பட்டுள்ளது மற்றவை அச்சு செய்யப்பட்டுள்ளதாக உள்ளது. அவர்கள் அளித்த தீர்வை சம்பந்தப்பட்ட ரசீது, முதன்முதலாக 8.8.85 முதல் தீர்வை செலுத்திய குறிப்பு உள்ளது. இந்த ரசீது ஆனது தனி நபர்களாகிய திரு. எம். செல்லமாசாரி, குருசாமி ஆச்சாரி, எம். இராமலிங்க ஆசாரி ஆகியோரது பெயரில் அப்போதைய அருப்புக்கோட்டை கிராம நிர்வாக அதிகாரி அவர்களால் வழங்கப்பட்டு உள்ளது.

நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் அருப்புக்கோட்டை வட்டாட்சியருடைய பட்டா மாறுதல் சம்பந்தமுடைய ஆணையில் அருப்புக்கோட்டை விஸ்வகர்ம ஐந்து வகுப்பு மகா ஜன சபை பொது உறவின்முறைக்கு பாத்தியப்பட்ட இடமாக ஆணையிடப்பட்டுள்ளது. 1.11.90ல் நிலவரி வசூல் செய்யப்பட்டதில், பட்டா வழங்கியதில் அருப்புக்கோட்டை விஸ்வகர்ம ஐந்து வகுப்பு மகா ஜன சபை பொது உறவின் முறைக்கு பாத்தியப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள கிரயம் செய்து பதிவு செய்யப்பட்டு கொடுக்கப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ள 63 ஆவணங்கள் குறித்து முழு விவரம் குறித்து உரிய பதிவுகளை சார் பதிவாளர் வசம் உள்ள ஆவணங்களை பெற்று ஆய்வு செய்து அறிக்கையை 15 தினங்களுக்குள் சமர்ப்பிக்கிறேன். அருப்புக்கோட்டை நகராட்சியால் சில பதிவு செய்யப்பட்ட நிலங்கள் வரன்முறைபடுத்தப்பட்டுள்ளது. அது அரசாணை எண்.59 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 25.07.2006 மற்றும் அதன் தொடர்ச்சியாக பிறப்பிக்கப்பட்ட அரசாணை எண்: 56 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 30.04.2007 ஆகிய அரசு ஆணைகள் அடிப்படையில் வரன்முறை செய்யப்பட்டுள்ளது. நகராட்சியால் அரசாணைகளின்படி தனி நபர்களுக்கு மனை முறையாக முறைப்படுத்தப்பட்டு அதற்குரிய கட்டிட அனுமதி வழங்கி உள்ளது."

மேற்படி வாக்குமூலத்தில் உறுதி அளித்தவாறு சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் அறிக்கை தாக்கல் செய்யுமாறு அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை 14.03.16ன் மூலம் வலியுறுத்தப்பட்டது. இதனிடையே மனுதாரர் திருமதி. மீனாட்சி அவர்களை 26.05.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.04.2016 தேதியிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேலும், விதிகளின்படி முறையீட்டு மனுவில் ரூ.10/– (பத்து) மதிப்பிலான நீதி மன்ற வில்லை ஒட்டப்படாததை சுட்டிக்காட்டி அதனையும் சமர்ப்பித்திட கூடுதல் வாய்ப்பளிக்கப்பட்டது. ஆனால், மனுதாரர் விசாரணைக்கும் ஆஜராகவில்லை நீதி மன்ற வில்லையினையும் சமர்ப்பிக்கவில்லை. இருப்பினும், அவர் தனது 24.05.2016 நாளிட்ட கடிதத்தில் தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தால் தன்னால் விசாரணைக்கு ஆஜராக இயலாத நிலை உள்ளது என தெரிவித்துள்ளார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு மேற்படி விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது குறித்து மனுதாரருக்கும் 30.05.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் தகவல் அளிக்கப்பட்டது.

மனுதாரருக்கு கூடுதல் வாய்ப்பு அளிக்கும் வகையில் 23.06.2016 அன்று விசாரணை நிர்ணயிக்கப்பட்டு 30.05.2016 நாளிட்ட அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது. இதனிடையே 15.06.2016 அன்று அருப்புக்கோட்டையில் இம்முறை மன்ற நடுவத்தால் நகராட்சி ஆணையரிடம் நேரடி விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது. மேலும், 14.06.2016 நாளிட்ட அறிவிப்பாணையில் சார் பதிவாளரை உடனடியாக நேரில் தொடர்பு கொண்டு உரிய வழிமுறைகளின்படி தேவைப்படும் ஆவண நகல்களைப் பெற்று ஆய்வு செய்து ஆய்வறிக்கையினை குறிப்புரைகளுடன் தாமதமின்றி தாக்கல் செய்திட வேண்டுமென வலியுறுத்தியும் ஆணையிடப்பட்டது.

மனுதாரர் 23.06.2016 அன்று நிர்ணயிக்கப்பட்ட விசாரணைக்கும் ஆஜராகவில்லை. எனவே, விதிகளின்படி நீதிமன்ற வில்லைக் கட்டணம் முறையாக சமர்ப்பிக்காதது மற்றும் போதிய கூடுதல் வாய்ப்புகள் அளித்தும் தவறியமையால் முறையீடு முகாந்திரமற்றதாகவே கருத வேண்டியுள்ளது. ஆயினும் வரப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

நகராட்சி ஆணையரது ந.க.எண்:9227/14/ எப்.1, நாள்: 10.06.2016 அறிக்கை 20.06.2016 அன்று வரப்பெற்றது. அதில் மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள வார்டு சி-பிளாக் 5 நகரபுல எண்: 83 ஆர்.எஸ்.எண்.118/3ல் உள்ள இடம் தொடர்பாக அருப்புக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பத்திரப் பதிவு நகல்களின்படி புகாரில் கூறியுள்ள நபர் திரு. மா. கண்ணன் என்பவரால் கிரையம் மேற்கொள்ளப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை 23 எனவும், தனி நபரால் வங்கிகள் மூலம் கடன் பெற்ற பத்திர பதிவுகள் 14 எனவும், மூன்றாம் நபர்களுக்கிடையேயான பத்திரப் பதிவுகள் 15 எனவும், தனி நபரால் வீட்டடி மனை நிலமாக கிரையம் பெற்ற பத்திரப் பதிவுகள் 3 எனவும், தானமாக பெறப்பட்ட வீட்டடி பத்திரப்பதிவுகள் 2 எனவும், பவர்பத்திரம் மூலமான பத்திரப்பதிவுகள் 2 எனவும், காலி மனையை தானமாக பத்திரப் பதிவு செய்யப்பட்டவை 2 எனவும், நகராட்சி எல்லைக்கு வெளியே உள்ள இடங்களுக்கான பத்திரப்பதிவுகள் 2 எனவும் மொத்தம் 63 பத்திரப்பதிவுகள் குறித்து பட்டியலிடப்பட்டுள்ளது.

இப்பத்திரப்பதிவுகள் தொடர்பான கோரிக்கைகள் அல்லது புகார்கள் குறித்து மனுதாரர் சம்பந்தப்பட்ட துறை அல்லது நீதிமன்றத்தினை அணுகி தீர்வு காணலாம். இருப்பினும், மேற்படி மனுதாரரது புகாரில் "நகராட்சி ஆணையாளர் நகர் ஊரமைப்பு துறையிடமிருந்து எவ்வித அனுமதியும் பெறாமல் சட்ட விரோதமாக வீடு கட்டுவதற்கு அனுமதி அளித்து வருவதாக" குறிப்பிட்டுள்ளது தொடர்பாக குறிப்பான பதிலறிக்கையினை தாக்கல் செய்யுமாறு நகராட்சி ஆணையருக்கு 10.08.2016 மற்றும் 28.09.2016 நாளிட்ட அறிவிப்பாணைகள் மூலம் ஆணையிடப்பட்டது.

அதன்படி அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையரிடமிருந்து ந.க.எண்.9227/2014/எப்1, நாள்:04.10.2016 அறிக்கை 17.10.2016 அன்று வரப்பெற்றது. அதில் கீழ்க்கண்டவாறான பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன.

"1. மேற்படி புல எண்களுக்குண்டான பரப்பளவு பகுதிகளில் உள்ள பிளாட்களுக்கு (பாதைகளாக பிரித்து கல் ஊன்றப்பட்டுள்ளது) நகராட்சி தரப்பில் அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை மற்றும் தனி நபரால் நகராட்சியில் விண்ணப்பம் பெறப்பட்டு நகர் ஊரமைப்புத் துறை அவர்களுக்கு விண்ணப்பம் ஏதும் பரிந்துரைகள் செய்யப்படவில்லை.

2. மேற்படி புல எண்களில் கட்டப்பட்டு வரும் கட்டிடங்களுக்கு நகராட்சியால் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை."

நகராட்சியின் முறையான அனுமதி பெறப்படாத இனங்களில் 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவுகளின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரங்கள் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்படாத நிலை கண்டனதுக்குரியது. சட்டப் பிரிவுகள் மற்றும் விதிகளின்படி உரிய நடவடிக்கைகளை உறுதி செய்திட வேண்டுமெனவும் அவ்வாறு செயல்பட தவறும் பட்சத்தில் நகராட்சிக்கு ஏற்படும் செலவீனம்/நிதி இழப்பீடுகளுக்கு நகராட்சி ஆணையரும் சம்பந்தப்பட்ட அலுவலர்களும் முழுப்பொறுப்பேற்க நேரிடும் என சுட்டிக்காட்டி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2016–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை–600 032

–//ஒப்பம்//––

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

29/12/2016

செயலாளர்

28.12.16

29/12/16

<u>பெறுநர்</u>

1. திருமதி. A. மீனாட்சி,
   32, பாரதிதாசன் 4-வது தெரு,
   வெள்ளைக்கோட்டை,
   அருப்புக்கோட்டை,
   விருதுநகர் மாவட்டம் - 626 101.
2. நகராட்சி ஆணையர்,
   அருப்புக்கோட்டை நகராட்சி,
   பந்தல்குடி ரோடு,
   விருதுநகர் மாவட்டம் - 626 101.
3. வட்டாட்சியர்,
   வட்டாட்சியரகம், பந்தல்குடி ரோடு,
   அருப்புக்கோட்டை,
   விருதுநகர் மாவட்டம் - 626 101.
4. சார் பதிவாளர்,
   சார் பதிவாளர் அலுவலகம்,
   திருத்தணி ரோடு,
   அருப்புக்கோட்டை,
   விருதுநகர் மாவட்டம் - 626 101.

<u>நகல்:</u>

1. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   திருநெல்வேலி மண்டலம்.
2. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   விருதுநகர் மாவட்டம் - 626 101.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
   சேப்பாக்கம்,
   சென்னை – 600 005.